In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| Ele.P.No.36/2022 | Deposition of Witness: C.W.4 |
| Name: O.Pandeeshwari | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 16-10-2024.

முதல் விசாரணை :

எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன். நான் நெய்க்காரப்பட்டி டவுன் பஞ்சாயத்து செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். கூடுதல் பொறுப்பாக ஆயக்குடி பஞ்சாயத்து அலுவலகத்தில் 24.09.2024 ல் இருந்து பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம், புது ஆயக்குடியைச் சேர்ந்த சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி, 36 ஏ, 9 வது வார்டு, என்பவரின் இறப்புச்சான்று கோரி விண்ணப்பித்த விண்ணப்ப எண்.D2019-33-3332000027 பதிவு செய்த தேதி 11.07.2019 நகல் நீ.ம.சாஆ.10.

30.03.2022 ம் தேதி பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து அனுப்பிய ந.க.எண்.2476/2022 ஊவ 10 கடிதத்தின் தகவல் பற்றிய விவரம் நகல் நீ.மசாஆ.11.

ந.க.எண்.77/0022/த.ஏ.நாள் 20.10.2023 தேதியிட்ட விசாரணை அறிக்கை பற்றிய விவர அறிக்கை நகல் நீ.மசாஆ-12.

சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி என்பவரின் இறப்புச் சான்றிதழ் உண்மை நகல் நீமசாஆ 13.

2022 ம் வருடத்திற்குரிய சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி மற்றும் தற்போது உயிருடன் இருக்கும் சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி வாக்காளர் பட்டியல் நகல் நீமசாஆ.14.

இறந்துபோன வேலுச்சாமியின் ஆதார் அட்டை நகல் நீமசாஆ.15

வாக்காளர் பட்டியலில் சின்னத்தம்பி மகன் வேலுச்சாமி என்ற பெயரில் இருவர் இருக்கும்போது அதில் ஒரு வேலுச்சாமி இறந்துவிட்டால் அவரது பெயரை

வாக்காளர் பட்டியலில் இருந்த நீக்க வேண்டியது தாலுகா அலுவலகத்தில் செய்யவேண்டும். வாக்காளர் பட்டியலை பார்த்தும் அவர் அந்த வார்டில் இருக்கிறாரா என்பதை பார்த்தும் முன்மொழிய அனுமதிப்போம். எதைப் பார்த்து அந்த நபர் அந்த வார்டில் குடியிருக்கிறாரா என்பதை பார்த்தோம் என்றால் வாக்காளர் பட்டியலை வைத்துத்தான் பார்ப்போம்.

3 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை- வழக்குரைஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கிறார்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை- வழக்குரைஞர் வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.10.16 18:20:09 +0530

Principal District Judge,
Dindigul.